**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 30.08.2022 செவ்வாய் கிழமை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திருமதி.பா.கவிதா,பி.காம்.,**
**தலைவர்,**
**திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு தூய்மை பணியாளர்கள் மற்றும் சீருடை பணியாளர்களுக்கு 2019-2020ஆம் ஆண்டு ரூ.30,658/-க்கு சீருடை வாங்கப்பட்டது. உரிய தொகையினை மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் லிட்., கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>** நகர் மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**<u>(ந.க.எண் 5577 /2017/எச்1)</u>** | **94** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 2 | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் த.நா.50எல்-6073 வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்து தருவதற்கு அரசு அங்கீகாரம் பெற்றுள்ள ஆட்டோ ஒர்க்ஸ் நிறுவனத்திடமிருந்து 02.08.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>வ.எண். \| நிறுவனத்தின் பெயர் \| விலைப்புள்ளி | **95** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>தொகை<br>ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ்,<br>1ஏ/12. பைபாஸ் ரோடு, விஜயபுரம்,<br>திருவாரூர்</td><td>1,91,219/-</td></tr>
<tr><td>2.</td><td>ஜெயராஜ் அண்ட் கம்பெனி,<br>நாஞ்சிக்கோட்டை ரோடு,<br>தஞ்சாவூர்</td><td>1,99,838/-</td></tr>
<tr><td>3.</td><td>அன்னை சத்யா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 13. இராம்கே ரோடு, செங்கம் தியேட்டர்,<br>திருவாரூர்</td><td>2,03,166/-</td></tr>
</table>
<br>
1) மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண் 1-ல் கண்டுள்ள தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் விஜயபுரம் திருவாரூர் என்ற நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.
<br><br>
2) மேற்படி வாகனம் பொதுசுகாதாரப் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு வாகனத்திற்கு தகுதி சான்று உடன் புதுப்பித்திட வேண்டியுள்ளதால் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ்,விஜயபுரம், திருவாரூர்நிறுவனத்திற்கு பணியாணை வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.
<br><br>
<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1987/2022/<br>எச்1)
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் எண்.TN-50R-1074 பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. அதனால் நகர்மன்ற தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் ஆய்வு பணிகள் மற்றும் ஆய்வுக் கூட்டத்திற்கு செல்ல இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி வாகனத்தின் பழுதுகளான பெயிண்டிங், சஸ்பென்சர், டிங்கர், சீட் ரிப்பேர், முன்புற கண்ணாடி, குளிர்சாதன பழுது, வீல் அலைன்மெண்ட் ஆகிய பழுதுகளை நீக்கம் செய்து வாகனத்தினை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு பழுது நீக்கும் பணிக்கு உத்தேசமாக ரூ.2.00இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 05.07.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும்</td>
<td>96</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்பெயர்<br>திருவாளர்கள்</th><th>மதிப்பீடு<br>ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு<br>ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>M/S.மது ஆட்டோ கேரேஜ், திருத்துறைப்பூண்டி</td><td rowspan="2">ரூ.2,00,000/-</td><td>ரூ.192,000/-</td><td>8.00சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>ஐயப்பன் டிங்கர் வெல்டிங் & ஒர்க்ஸ் திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.222,000/-</td><td>22.00சதவீதம் அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு:</u>

1. வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 8% குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.மது ஆட்டோ கேரேஜ், திருத்துறைப்பூண்டி என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கலாம், மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

<u>(ந.க.எண் 383 /2011/இ1)</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>4</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்2022-2023-ன்கீழ் வார்டு எண்.12 நாகை சாலையில் உள்ள தேளிக் குளத்தினை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.64.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி அரசாணை எண்.88, நாள்.17.06.2022-ன்படி பெறப்பட்டு, இப்பணிக்கு 29.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ.பை.</th><th>ஒப்பந்தப் புள்ளி சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S.மங்கையர்க்க ரசி</td><td>ரூ.55,81,661/-</td><td>59,76,459.26</td><td>7.07% அதிகம்</td></tr>
</table>
</td>
<td>97</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | கன்ஸ்ட்ரக்ஸன் | | | |
| 2. | எஸ்.விஜய குமாரி | | 60.27,950.82 | 7.99% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிக சதவீதத்தில் வரப்பெற்றுள்ளதால் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஸன் நிறுவனத்திடம் விலைக் குறைப்பு செய்து தர கோரப்பட்டது. பின்வரும் விவரப்படி விலைக் குறைப்பு செய்து சம்மதக் கடிதம் வழங்கியுள்ளார். நகர் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. பை. | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் குறைவு/ அதிகம் | விலைக் குறைப்பு செய்த பிறகு தொகை ரூ. | சத வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | M/S.மங்கையர்க் கரசி கன்ஸ்ட்ரக்ஸன் | 55,81,661.00 | 59,76,459.26 | 7.07% அதிகம் | 55,81,061 | 0.01% குறைவு |

<u>**அலுவலக குறிப்பு:**</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஸன் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

2. பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த தாரருக்கு பணி உத்தரவு

<table>
<tr>
<td></td>
<td>வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><u>ந.க.எண்.1576/2022-இ1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>5</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன்கீழ் வார்டு எண்.21 சாய்நகர் பூங்காவினை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.20.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி அரசாணை எண்.88, நாள்.17.06.2022-ன்படி பெறப்பட்டு, இப்பணிக்கு 29.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஸன்</td><td rowspan="2">19,14,600/-</td><td>21,05,874/-</td><td>10.00%அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>எஸ்.விஜய குமாரி</td><td>20 49,528/-</td><td>7.00%அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிக சதவீதத்தில் வரப்பெற்றுள்ளதால் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.விஜயகுமாரி ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு செய்துதர கோரப்பட்டது. பின்வரும் விவரப்படி விலைக் குறைப்பு செய்து சம்மதக் கடிதம் வழங்கியுள்ளார்.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி சதவீதம் குறைவு/ அதிகம்</th><th>விலைக் குறைப்பு செய்த பிறகு தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>எஸ்.விஜயகுமாரி</td><td>19,14,600/-</td><td>20,49,528/-</td><td>7.00% அதிகம்</td><td>19,14,200/-</td><td>0.02% குறைவு</td></tr>
</table>
</td>
<td>98</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.விஜயகுமாரி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கிய மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br>**<u>ந.க.எண்.1576/2022-இ1</u>** | | |
| **6** | நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4946/2018/தம3 மூலமாக திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட புல எண்கள். 35/8,9,41/5ஏ2ல் 92631.00 ச.அடி இடத்தில் அமையும் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளதின் அடிப்படையில். மேற்கண்டுள்ள மனைப்பிரிவின் உரிமையாளர் திருமதி.சி.ஜானகி என்பவரின் கோரிக்கையினை ஏற்று மேற்கண்டுள்ள மனைப்பிரிவின் சாலைகளின் ஓரமாக தெருவிளக்கு கம்பங்கள் 8 எண்ணிக்கையில் அமைத்து தர கோரி உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் , திருத்துறைப்பூண்டி அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.** நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br><u>ந.க.எண்.2421/2019/எப்1.</u> | **99** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>7</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5 புதியபேருந்து நிலையம் அருகில் தினசரி காய்கறி மார்க்கெட் மற்றும் வணிக வளாகம் கட்டுவதற்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.295.40இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு இடையூராக மின்சார வாரிய மின் கம்பம் உள்ளதால் அதனை அகற்றி தரக்கோரி மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டதில் மின்கம்பம் மாற்றுவதற்கு உரிய கட்டணத் தொகை ரூ.1,02,161/-ஐ செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளதால் மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணத் தொகை ரூ.1,02,161/-ஐ பொது நிதியிலிருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது..<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இவ்வலுவலக நடைமுறையை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பொது நிதியில் நிதி பற்றாக் குறையை கருத்தில்கொண்டு திட்டப் பணியில் செலவு செய்யலாம் பின்னர் திட்டப் பணிக்கு திரும்ப ஈடு செய்யமன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br><u>ந.க..எண்.1784/2021,இ1</u></td><td>100</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>8</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 நாகை சாலையில் உள்ள தேளிக்குளம் மேம்பாடு செய்யும்பணி ரூ.64.00இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் வார்டு எண்.21 சாய்நகர் பூங்காவினை ரூ.20.50இலட்சம் மதிப்பீட்டிலும் மேம்பாடு செய்யும் பணிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022-2023ன்கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தினமணி நாளிதழில் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கான கட்டணத்தொகை ரூ.3,507/- எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன் (மதுரை) பிரைவேட் லிட்., நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><table><tr><td>வ. எண்</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>விளம்பரம் வெளியிடப்பட்ட தேதி</td><td>கட்டணத் தொகை ரூ.</td></tr></table></td><td>101</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>எக்ஸ்பிரஸ்பப்ளிகேசன் (மதுரை) பிரைவேட் லிட்.,</td><td>தினமணி நாளிதழ் 29.06.2022</td><td>3,507.00</td></tr>
<tr><td></td><td></td><td>கூடுதல்</td><td>3,507.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட அலுவலக நடவடிக்கையை அனுமதித்து பதிவு செய்யலாம்.
<u>கோ.எண்.1576/2022/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>9</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் வடபாதி ஆற்றங்கரை தெருவிலுள்ள உரக்கிடங்கில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018-19 (IUDM) திட்டத்தின்கீழ் கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணி ரூ.185.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான Consent to Operate அனுமதி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலம் பெறுவதற்கு இணைய வழியில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. Consent to Operate அனுமதி பெறுவதற்கு 11.08.2022 அன்று மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், நாகப்பட்டினம் அவர்களை தொலைபேசி வாயிலாக நகராட்சி பொறியாளரால் தொடர்பு கொள்ளப்பட்டது. அதற்கான கட்டணம் ஓராண்டுக்கு ரூ.43,600/-வீதம் 5 ஆண்டுகளுக்கான கட்டணத் தொகை ரூ.2,18,000/-வரைவோலையாக செலுத்துமாறு சுற்று சூழல் பொறியாளர், நாகப்பட்டினம் அவர்கள் கூறியதை அடுத்து “District Environmental Engineer, TNPC Board, Nagapattinam” என்ற முகவரிக்கு வரைவோலையாக செலுத்தியதை மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.
<u>அலுவலக குறிப்பு:</u>
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை IUDM நிதியின்கீழ் ரூ.2,18,000/- செலுத்துவதற்கு மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.
</td>
<td>102</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td><u>ந.க..எண்.3770/2018/இ1</u></td><td></td><td></td></tr>
<tr><td>10</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி 2021-22 நிதியின் கீழ் வார்டு எண்.20 வேதாரண்யம் சாலையில் உள்ள குப்பை கிடங்கினை உயிரி செரிமான (Bio Mining) கொள்கலன் முறையில் அமைத்து குப்பைகளை தரம் பிரித்து குப்பைகள் அகற்றும் பணிக்கு ரூ.109.60இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்.9512/2022/ SBM1 நாள்.20.06.2022-ன்படி பெறப்பட்டு, இப்பணிக்கு 22.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் இணைய வழி வரப்பெற்றன.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ</th><th>ஒப்பந்தப் புள்ளி சதவீதம் குறைவு/அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>SaramEnviro Services Private Ltd.,Adithya Enclave<br>B319 2nd Floor, ERI Scheme<br>Mugaippair West,<br>Chennai 600 037.</td><td rowspan="2">1,09,60,000/-</td><td>1,09,59,921/-</td><td>0.01% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>Our Land Engineering Works Private Ltd.,70/1 Anjugam Nagar,<br>3rd Street, Jafferkhanper,<br>Chennai 600 083</td><td>1,18,56,780/-</td><td>8.00%அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Saram Enviro Services Private Ltd, Adithya Enclave B319 2nd Floor, ERI Scheme , Mugaippair West, Chennai 600 037 ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க அனுமதிக்கு மன்ற வரைவு ஒப்புதலுக்கு.<br><br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள SaramEnviro Services Private Ltd, Chennai ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br><br>
2. பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற</td><td>103</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த நிறுவனத்திற்கு LOA வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><u>ந.க.எண்.545/2017-இ1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>11</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்த இயலாத பொருட்கள் 12.08.2022ம் தேதி விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று ஏலதாரர்களிடமிருந்து கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம்
<table>
<tr><th>வ.எண்.</th><th>விலைப்புள்ளி அளித்துள்ளவர்களின் பெயர்/ முகவரி<br>திருவாளர்கள்</th><th>ஏலம் கோரிய தொகை<br>ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>பி.மெய்கண்டவேல்,<br>பெரியநாயகிபுரம்,<br>திருத்துறைப்பூண்டி.</td><td>25,100/-</td></tr>
<tr><td>2.</td><td>எம்.ராம்குமார்,<br>ஆஸ்பத்திரி தெரு,<br>திருத்துறைப்பூண்டி.</td><td>26,500/-</td></tr>
<tr><td>3.</td><td>கோ.பாலசுப்ரமணியன்,<br>திருவாரூர் ரோடு,<br>திருத்துறைப்பூண்டி.</td><td>27,150/-</td></tr>
</table>
மேற்படி, வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3-ல் உள்ள திரு.கோ.பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர், திருவாரூர் ரோடு திருத்துறைப்பூண்டி அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியினை அதிகமாக அளித்துள்ளார். மேற்படி பழைய பொருட்களை எடுத்து செல்ல அனுமதிக்கப்பட்டு ரூ.27,150/- நகராட்சி கருவூலத்தில் செலுத்தப் பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் அறிவுரைக்கிணங்க தொகையினை செலுத்தி பழைய பொருட்களை எடுத்து செல்ல அனுமதித்தை மன்றம்</td>
<td>104</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br>**<u>(ந.க.எண் 1962 /2022/எச்1)</u>** | | |
| **12** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள ஏ.சி.ஷீட் கடை எண்.01 முதல் 08 வரையுள்ள கடைகளின் குத்தகைதாரர்கள் செலுத்தி வரப்பெற்ற மாதாந்திர வாடகை தொகையில் 15 சதவீதம் உயர்வு செய்து அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007-ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி 01.07.2019 முதல் 30.06.2022 வரை உரிமத்தினை மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி கடைகளின் குத்தகை காலம் 30.06.2022 ஆம் தேதியுடன் முடிவடைந்ததால் தனியர்கள் செலுத்தி வரப்பெற்ற வாடகை தொகையில் 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு அதாவது **01.07.2022** முதல் **30.06.2025** வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்கக்கோரி குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **105** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| குத்தகை இனம் | குத்தகைதாரரின் பெயர்/முகவரி திருவாளர் | குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற மாதாந்திர வாடகை ரூ (15% முன்) | நிர்யணம் செய்யப்படும் வாடகை ரூ. (15% பின்) |
|---|---|---|---|
| புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண்.01 | க.இராஜமாணிக்கம். த/பெ.கண்ணுசாமி, பாமணி ரோடு, திருத்துறைப்பூண்டி. | **3450 /-** | **3968 /-** |
| புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண்.02 | அ.தாஜிதீன், த/பெ.அலாவுதீன், வேதாரண்யம் ரோடு, திருத்துறைப்பூண்டி. | **3163 /-** | **3637 /-** |
| புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண்.03 | கோ.ராஜீ, த/பெ.கோவிந்தராஜ், வேளூர் அஞ்சல், திருத்துறைப்பூண்டி. | **3163 /-** | **3637 /-** |
| புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண்.04 | கோ.ராஜீ, த/பெ.கோவிந்தராஜ், வேளூர் அஞ்சல், திருத்துறைப்பூண்டி. | **2990 /-** | **3439 /-** |

| | | | |
|---|---|---|---|
| புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண்.05 | க.இராஜமாணிக்கம். த/பெ.கண்ணுசாமி, பாமணி ரோடு, திருத்துறைப்பூண்டி. | **2933 /-** | **3373 /-** |
| புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண்.06 | சு.சங்கர், த/பெ.சுப்ரமணியன், 130.மன்னை ரஸ்தா எடத்தெரு, திருத்துறைப்பூண்டி. | **2933 /-** | **3373 /-** |
| புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண்.07 | ப.திருமாவளவன், த/பெ.பரிமளம், இடும்பவனம் அஞ்சல், திருத்துறைப்பூண்டி. | **2933 /-** | **3373 /-** |
| புதிய பேருந்து நிலைய ஏ.சி.ஷீட் கடை எண்.08 | ப.திருமாவளவன், த/பெ.பரிமளம், இடும்பவனம் அஞ்சல், திருத்துறைப்பூண்டி. | **2933 /-** | **3373 /-** |

**அலுவலக குறிப்பு:**

**1.** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**2.** அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007-ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி குத்தகைதாரர்கள் செலுத்தி வரப்பெற்ற மாதாந்திர வாடகை தொகையில் 15 சதவீதம் உயர்வு செய்து **01.07.2022 முதல் 30.06.2025 வரை** அங்கீகரித்து குத்தகைதாரர்களுக்குக்கு உரிமத்தினை புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

1. கடை எண்.01 - ந.க.எண்.4160/2006/அ2
2. கடை எண்.02 - ந.க.எண்.4162/2006/அ2
3. கடை எண்.03 - ந.க.எண்.4164/2006/அ2
4. கடை எண்.04 - ந.க.எண்.4166/2006/அ2
5. கடை எண்.05 - ந.க.எண்.4168/2006/அ2
6. கடை எண்.06 - ந.க.எண்.4170/2006/அ2
7. கடை எண்.07 - ந.க.எண்.4172/2006/அ2
8. கடை எண்.08 - ந.க.எண்.4174/2006/அ2

| | | | |
|---|---|---|---|
| **13** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 09 தெற்கு வீதி கதவு எண் 36 மற்றும் வரி விதிப்பு எண் 4380-ல் உள்ள கட்டிடத்திற்கு திரு.நமச்சிவாய ராஜேஸ்வரி என்பவர் பெயரில் 01.04.1997 | **106** | **அலுவலக குறிப்பு** |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் முதல் அரையாண்டு சொத்து வரி தொகையாக ரூ.9,498/- என வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 1998-99 இரண்டாம் அரையாண்டு சொத்து வரி பொது சீராய்வின்படி மேற்காணும் சொத்து வரியை இரு மடங்காக உயர்த்தி அரையாண்டு வரியாக ரூ.18,996/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி சொத்து வரி உயர்வினை ஆட்சேபனை செய்து திரு.நமச்சிவாய ராஜேஸ்வரி என்பவரால் இந்நகராட்சிக்கு எதிராக திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் 8/2002-ன்படி வழக்கு தொடரப்பட்டு, மேற்படி வழக்கில் திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 28.08.2003-ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணையில் நகராட்சியால் மேற்படி கட்டிடத்திற்கு விதிக்கப்பட்ட கூடுதல் சொத்து வரி செல்லாது எனவும், அவ்வாறு கூடுதலாக விதிக்கப்பட்ட சொத்து வரியினை வசூலிக்க கூடாது என்றும் தடை செய்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>இதனை தொடர்ந்து மேற்படி கட்டிடத்திற்கு திரு.நமச்சிவாய ராஜேஸ்வரி என்பவரால் திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தார் தீர்ப்பின் அடிப்படையில் சொத்து வரி தொகை 42 அரையாண்டிற்கு ரூ.4,54,141/-க்கான தொகையானது இந்நகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.<br><br>மேலும், சொத்து வரி கேட்பு பதிவேட்டில் 2000-2001ஆம் ஆண்டிலிருந்து அரையாண்டு சொத்து வரியாக ரூ.18,996/- எனவும், 2008-09 ஆம் ஆண்டு சொத்து வரி பொது சீராய்வின்படி மேற்காணும் சொத்து வரி தொகை ரூ.18,996/-ஐ ரூ.23,745/- எனவும், 1.4.2022 சொத்து வரி பொது சீராய்வின்படி ரூ.47,490/- ஆக நடப்பாண்டு வரை சொத்து வரி கேட்பாக உள்ளது.<br><br>இந்நிலையில் திரு.நமச்சிவாய ராஜேஸ்வரி என்பவர் திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தார் தீர்ப்பாணை நகலுடன் 13.07.2022ம் தேதி ஆணையர் அவர்களுக்கு தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்படி ஆணையர் அவர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு, அதில் 2000-2001ம் ஆண்டு முதல் 2007-08 இரண்டாம் அரையாண்டு வரை நீதிமன்றம் நிர்ணயம் செய்த சொத்து வரி தொகை ரூ.9,498/-ஐ கேட்பாக எழுப்பி வசூல் செய்யவும், 2008-09ஆம் ஆண்டு சொத்து வரி பொது சீராய்வில் இந்நகராட்சி வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு நகர்மன்ற தீர்மானஎண் 134 நாள் 27.07.2008ன்படி 25 சதவீதம் உயர்த்தி வசூல் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையின் அடிப்படையிலும், மேலும், ஏற்கனவே நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.9,498/- என சொத்து வரி தொகையிலிருந்து 25 சதவீதம் உயர்த்தி அரையாண்டு கேட்பாக ரூ.11,873/- என வரி நிர்ணயம் செய்யவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>இந்நிலையில் மேற்காணும் அரசாணையில் நிர்ணயம் செய்யப்பட்டதையும், நீதிமன்ற | | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | தீர்ப்பின் அடிப்படையிலும் சொத்து வரியினை திருத்தியமைத்து 2000-01ஆம் ஆண்டிலிருந்து 2021-22 இரண்டாம் அரையாண்டு வரை நிர்ணயம் செய்த 42 அரையாண்டுகளுக்கான வரி தொகை செலுத்தியது போக மீதமுள்ள நிலுவை வித்தியாச தொகை ரூ.4,64,387/-ஐ தள்ளுபடி (Writte off) செய்ய நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு (Ticket) டிக்கெட் போட்டு கேட்பினை திருத்தியமைத்து தர கோருவதற்கு மன்றத்தின் பார்வைக்கும், மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.** 2008-09 முதல் அரையாண்டிலிருந்து சொத்து வரி தொகை ரூ.11,873/-என நிர்ணயம் செய்யவும், 2022-23 முதல் அரையாண்டு முதல் சொத்து வரி கேட்பாக ஒரு அரையாண்டிற்கு ரூ.23,746/- என நிர்ணயம் செய்திடவும் கூடுதலாக உள்ள வித்தியாசத் சொத்து வரி நிலுவை கேட்பினை ரூ.4,64,387/-ஐ தள்ளுபடி செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1850/2022/அ1) | | |
| **14** | திருத்துறைப்பூண்டி நகராட்சி இந்தியன் ரெட் கிராஸ் சொஸைட்டிக்கு ஆண்டு சந்தாவாக ரூ.2,500/- வீதம் 2018-19 முதல் 2022-23 வரை ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.12,500/- வருவாய் நிதியிலிருந்து செலுத்திட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.** தமிழ்நாடு அரசாணை எண் (நிலை) 157 நாள் 03.11.2016-ன்படி தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்திட மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1886/2022/எச்1) | **107** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **15** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் த.நா.50-எல்-6073 (டாடா ஏசி) | **108** | **அலுவலக குறிப்பு** |

<table>
<tr>
<td></td>
<td>வாகனத்திற்கு தகுதி சான்று ஜூலை-2022ல் முடிவடைந்துள்ளதால், வாகனத்தினை புதுப்பித்து பழுதுகள் நீக்கம் செய்திட அரசு அங்கீகாரம் பெற்ற ஒப்பந்த நிறுவனங்களின் விலைப்புள்ளி பெற்று பொதுசுகாதாரப் பிரிவு பயன்பாட்டிற்கு பயன்படுத்திட ஆகும் செலவின தொகை ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இந்நகராட்சியின் பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்கு பயன்படுத்திட ஆகும் செலவினம் வருவாய் நிதியில் செலவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1987/2022/எச்1)</td>
<td></td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>16</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொறியியல் பிரிவு கழிவு நீர் வாகனம் எண்.TN-50AX-6429 பேட்டரி பழுதடைந்து வாகனம் இயக்க இயலாத நிலையில் உள்ளது. அவசர அவசியம் கருதி புதிய பேட்டரி வாகனம் வாங்குவதற்கு 10.08.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>எம்.வி.கே.எண்டர்பிரைசஸ், திருத்துறைப்பூண்டி</td><td rowspan="3">ரூ.9,500 /-</td><td>ரூ.9,200/-</td><td>3.26% சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>SM.RM.Tyres, South Street, திருவாரூர்</td><td>ரூ.9,350/-</td><td>1.60% சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>3</td><td>ஸ்ரீ.ராகவேந்திரா அண்ட்கோ, திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.9,400/-</td><td>1.00%சதவீதம் குறைவு</td></tr>
</table>
</td>
<td>109</td>
<td>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 3.26% குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள எம்.வி.கே. எண்டர்பிரைசஸ், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><u>ந.க.எண்.2188/2022,இ1</u> | | |
| **17** | இந்நகராட்சிப் பகுதியிலுள்ள வேதை சாலையில் இயங்கி வரும் நவீன எரிவாயு தகன மேடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்காக நகராட்சிப் பகுதியிலுள்ள children and Women Development Trust திருத்துறைப்பூண்டி என்ற நிறுவனத்திற்கு 01.08.2022 முதல் இயக்குதல் பணிக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நவம்பர்-2021, டிசம்பர்-2021 மற்றும் ஜனவரி-2022 ஆகிய மூன்று மாதங்கள் நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. மேலும் பிப்ரவரி-2022 முதல் ஜூலை-2022 வரை இயங்கவில்லை. இரண்டு பணியாளர்களுக்கு மூன்று மாதம் ஊதியம் மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ளபடி வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** பணியாளர்கள் ஊதியம் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><u>ந.க.எண்.1482/2021/எச்1</u> | **110** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/ பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/